✻ **இந்த மாநாட்டில் நீங்கள் சமர்ப்பிக்கும் கட்டுரை என்ன?**

என்னுடைய கட்டுரை சங்க இலக்கியத்தின் முகமை பற்றியது. அனைத்திந்தியாவில் உள்ள சமய இலக்கியங்களில் சங்க இலக்கியம் மிக முக்கியமானது. சங்க இலக்கியத்தில் தான் ஒவ்வொரு சூழலில் ஒவ்வொரு பாத்திரம் இருக்கிறது. நான் சமர்ப்பிக்கின்ற ஆராய்ச்சிக் கட்டுரை சங்க இலக்கியங்கள் பெற்றுள்ள வரலாறு தான். அதனுள் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதை என் கட்டுரையில் விரிவாக மட்டுமின்றி விளக்கமாகவும் ஆராய்ந்துள்ளேன். இது தொடர்பான பிரதியை நான் முன்கூட்டியே அனுப்பியிருந்தேன். என்னுடைய அந்தக் கட்டுரை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

✻ **அண்மையில் தமிழ்மொழியில் நீங்கள் எழுதிய நூல் ஏதாவது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?**

'ஸ்ரீலங்கன் தமிழ்' பற்றிய ஒரு கட்டுரையை எழுதியுள்ளேன். இலங்கைத் தமிழர் அல்லாதவர்களுக்கு இலங்கை தமிழ் சமுதாயம் பற்றிய ஒரு கட்டுரையை ஆங்கிலத்தில் எழுதியுள்ளேன். அதை விரைவில் சிங்கள மொழியில் மொழி பெயர்க்க இருக்கிறார்கள். இலங்கைத் தமிழின் வளர்ச்சி பற்றியும், தமிழின் தொன்மை குறித்தும் விரிவாக எழுதியுள்ளேன். இப்படிப் பல நூல்களைச் சொல்லலாம்.

✻ **இலங்கை அரசின் நிர்ப்பந்தத்தால்தான் நீங்கள் தமிழ் செம்மொழி மாநாட்டுக்கு வந்திருப்பதாகப் பேசப்படுகிறதே?**

இது முற்றிலும் ஒரு தவறான தகவல். இந்த விஷயத்தை முக்கியமாக நான் சொல்ல வேண்டும். என் வருகைக்கும், இலங்கை அரசுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்தியாவில் இந்தியன், தமிழன் எப்படியோ, சிங்கப்பூரில் சிங்கப்பூர் தமிழர், தமிழன் எப்படியோ அது போல நான் இலங்கையனாகவும், தமிழனாகவும் இந்த மாநாட்டுக்கு வந்திருக்கிறேன். இது தான் என்னுடைய அடையாளம். ஒன்றுக்காக மற்ற அடையாளத்தை விட்டுவிட நான் தயாராக இல்லை.

✻ **இலங்கையில் தமிழர்களின் நிலை தற்போது எப்படி இருக்கிறது?**

நன்றாக இருக்கிறது. ஆனால் அதைப் பற்றிப் பேசினால் வேறு மாதிரி சித்தரிக்கப்படும். ஒன்று மட்டும் நான் சொல்கிறேன். இந்த உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் தமிழ் செம்மொழி பற்றி விவாதிக்கப்படும் விஷயங்கள் இங்கு முக்கியமோ இல்லையோ, இலங்கைக்கு மிகவும் முக்கியம். இலங்கையில் வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் தமிழே உத்யோக மொழியாக இருக்கிறது. இந்த சூழ்நிலையில் நான் இந்த மாநாட்டில் கலந்து கொள்வது பெரும் சிறப்பு. இந்த மாநாட்டின் மூலம் உலக நாடுகளில் தமிழ் மொழியை எவ்வாறு வகுத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு ஏற்படும்.




*நான் இலங்கையனாகவும்,*
*தமிழனாகவும்*
*இந்த மாநாட்டுக்கு வந்திருக்கிறேன்.*
*இதுதான் என்னுடைய அடையாளம்.*
*ஒன்றுக்காக மற்ற அடையாளத்தை*
*விட்டுவிட நான் தயாராக இல்லை.*

✻ **சரி, இந்த மாநாட்டின் சிறப்பம்சமாக எதை நினைக்கிறீர்கள்?**

முக்கியமாக மூன்று அம்சங்களைச் சொல்லலாம். சங்க கால இலக்கியங்களின் பதிவுகள், அதைப் பொதுமக்கள் கண்டுகளிக்கும் விதமான ஏற்பாடுகள், ஆய்வரங்கங்கள், மாநாட்டின் நிகழ்வுகள் போன்றவை சிறப்பாக இருக்கின்றன. இதுவரை நடந்த உலகத்தமிழ் மாநாடுகளில் சொல்லப்படாத விஷயங்கள் இந்த மாநாட்டில் சொல்லப்பட்டு இருக்கின்றன என்பது இன்னொரு முக்கிய அம்சம். மொத்தத்தில் இந்த மாநாடு அதிமுக்கியத்துவம் வாய்ந்தது. இந்தத் தமிழ் செம்மொழி மாநாட்டு முக்கியத்துவத்தை யாரும் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது.

**படங்கள்: எஸ்.கமலக்கண்ணன்**